# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2019 சனவரி

# (AA26) வியாபார முகாமையும் தந்திரோபாயமும்

இவ்வினாப்பத்திரம் A, B, C, D எனும் 4 பகுதிகளில் 10 கட்டாய வினாக்களைக் கொண்டிருக்கிறது.

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

**வினா இல. 01**

வினா இல. 1 ஆனது பத்து (10) கட்டாய வினாக்களை உள்ளடக்கியிருந்தது. ஒவ்வொரு வினாவுக்கும் 2 புள்ளிகள் வீதம் மொத்தமாக 20 புள்ளிகள் இவ்வினாவுக்குரியதாகும்.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு, மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை மாத்திரம் விடைப்புத்தகத்தில் எழுதுதல் வேண்டும். பரீட்சார்த்திகள் இவ்வகையான வினாக்களுக்கு விடையளிக்கும்போது நேர முகாமைத்துவத்தையும் வினாக்களுக்கு விடையளிப்பதற்கான அறிவுறுத்தல்களையும் கவனமாகப் பின்பற்றுதல் வேண்டும். அதிகளவான பரீட்சார்த்திகள் அதனைச் செய்திருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் விடை இலக்கத்திற்குப் பதிலாக முழு விடையையும் விடைப் புத்தகத்தில் எழுதியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. மேலும், இலகுவாக புள்ளிகளைப் பெற்றிருக்கக்கூடிய வினாக்களுக்கு விடையளிப்பதையும் சில பரீட்சார்த்திகள் தவிர்த்திருந்தனர்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியானதா அல்லது தவறானதா என்பதைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அறிவுறுத்தல்களைப் பின்பற்றிச் சரியாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட அறிவுறுத்தல்களில் தமது கவனத்தைச் செலுத்தாது ‘‘சரியானது’’ அல்லது ‘‘தவறானது’’ என எழுதுவதற்குப் பதிலாக (✓), (X) எனும் குறியீடுகளைப் பயன்படுத்தியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. சில பரீட்சார்த்திகள் உப வினாக்கள் **1.8** மற்றும் **1.9** இற்குச் சரியான விடையை அளிப்பதற்குத் தவறியிருந்தனர். பரீட்சார்த்திகள் ‘குறியீடு அகற்றுதல்’ என்ற பதம் பற்றிய விளக்கத்தைக் கொண்டிருக்கவில்லை. அத்துடன் அவர்கள் கீழ் நோக்கிய தொடர்பாடல் மற்றும் மேல்நோக்கிய தொடர்பாடல் ஆகிய இரண்டையும் குழப்பி எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி B

இந்தப் பகுதி ஒவ்வொரு வினாவுக்கும் 5 புள்ளிகள் வீதம் மொத்தமாக 25 புள்ளிகளுக்காக ஐந்து வினாக்களைக் கொண்டிருந்தது. இந்த ஐந்து வினாக்களுக்குமான பெரும்பாலான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டம் மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாக்களில் சிலவற்றிற்கு விடை எழுதியிருக்கவில்லை.

**வினா இல. 02**

இவ்வினா ஹென்றி பயோலினால் அறிமுகப்படுத்தப்பட்ட 14 முகாமைத்துவக் கோட்பாடுகளில் 2 முகாமைத்துவக் கோட்பாடுகளை விபரிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பொதுவாக அதிகளவான பரீட்சார்த்திகள் இரண்டு கோட்பாடுகளை எழுதி, அவற்றை விபரித்திருந்தனர். குறிப்பிட்ட சில

பரீட்சார்த்திகள் முகாமைத் தொழிற்பாடுகளான திட்டமிடல், ஒழுங்கமைத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றை எழுதியிருந்தனர். இன்னும் சில பரீட்சார்த்திகள் தொழிற் பிரிப்புக் கோட்பாடுகளுக்குப் பதிலாக சிறப்புத்தேர்ச்சி மற்றும் ஊக்குவிப்பு போன்றவற்றைக் குறிப்பிட்டிருந்தனர். அதிகாரம் மற்றும் பொறுப்புடைமை ஒரு கோட்பாட்டினைக் கொண்டிருந்த போதிலும், அவை இரண்டு கோட்பாடுகளாக சில பரீட்சார்த்திகளால் எழுதப்பட்டிருந்தன. சில பரீட்சார்த்திகள் கோட்பாடுகளை ஏற்பிசைவு செய்திருந்த போதிலும் அவற்றைச் சரியாக விபரித்திருக்கவில்லை. இது குறிப்பான விடையினைக் கொண்டுள்ள இலகுவான வினாவாக இருந்ததால் புள்ளிகளை இலகுவாகக் பெற்றுக்கொண்டிருக்க முடியும்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 03**

இவ்வினா யப்பானிய முகாமைத்துவப் பாணியுடன் இணைந்த 5 பிரதான நடவடிக்கைகளைக் குறிப்பிடுமாறு கேட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் திருப்திகரமாக விடை அளித்திருக்கவில்லை. பாடம் சம்பந்தமான அறிவு குறைவாகக் காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. தரப்பட்ட விடைகள் சரியான விளக்கமின்றிக் காணப்பட்டிருந்தது. மேலும், 5 விடயங்களை மாத்திரம் குறிப்பிடுமாறு கோரப்பட்டிருந்த போதிலும், தேவையற்ற விபரமான விடைகள் எழுதப்பட்டிருந்தன. பரீட்சார்த்திகளிடம் யப்பானிய முகாமைத்துவம் பற்றிய அறிவு காணப்படவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. பலர் இவ்வினாவுக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்தனர். வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே இவ்வினா தொடர்பில் சரியான விடைகளை வழங்கியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 04**

இவ்வினா கட்டுப்பாட்டுச் செயன்முறையின் படிமுறைகளை விபரிக்குமாறு கோரியிருந்தது. இது பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் கீழ் மட்டத்தில் இருந்தமை தரப்பட்ட விடைகளிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. கட்டப்பாட்டுப் படிமுறைகளுக்குப் பதிலாக தீர்மானமெடுத்தல் படிமுறைகளைப் பரீட்சார்த்திகள் எழுதியிருந்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. குறிப்பிட்ட சிலர் திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் போன்ற முகாமைத்துவச் செயன்முறைகளை விபரித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் கட்டுப்பாட்டுச் செயன்முறையின் படிமுறைகளை சரியாக எழுதியிருந்தனர் ஆயினும் அவற்றை விபரித்திருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை தாழ்ந்த மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 05**

இவ்வினா நிறுவனம் ஒன்றில் விளைதிறன்மிக்க கலாசாரம் ஒன்றினை உருவாக்குவதற்கான இரண்டு வழிமுறைகளை விபரிக்குமாறு கேட்டிருந்தது. முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு 2 வழிமுறை களைப் பெயரிட்டு அவற்றைச் சுருக்கமாக விபரித்திருப்பது போதுமானதாக இருந்திருக்கும். வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதைச் சரியாக விளங்கியிருந்த பரீட்சார்த்திகள் மாத்திரமே திருப்திகரமாக விடை எழுதி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் ஏன் குறைந்த மட்டத்தில் புள்ளிகளைப் பெற்றிருந்தனர் என்பதற்கான காரணம், அவர்கள் கலாசாரம் ஒன்றின் முக்கியத்துவம், கலாசார வலையமைப்பு, நல்ல கலாசாரம் ஒன்றின் பண்பியல்புகள் என்றவாறு தேவையற்ற, சம்பந்தமற்ற விபரங்களை எழுதியிருந்தமை ஆகும். சில பரீட்சார்த்திகள் கலாசாரம் பற்றி அவர்களுக்குத் தெரிந்திருந்த சகலதையும் உள்ளடக்குவதற்கு முயற்சித்திருந்தனர். அத்துடன் இவ்வினாவுக்கு எவ்வித விடையையும் எழுதியிராத பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 06**

இவ்வினா முகவராண்மைக் கோட்பாட்டிற்கும் செயன்முகமைக் கோட்பாட்டிற்கும் இடையிலான 5 வேறுபாடுகளைக் குறிப்பிடுமாறு கோரியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் எழுதப்பட்ட விடைகள் மிகவும் திருப்தியற்றதாகக் காணப்பட்டதால் புள்ளிகளைப் பெற்றுக்கொண்டமை மிகவும் கீழ் மட்டத்தில் காணப்பட்டிருந்தது. இவ்வினாவுக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்தவர்களின் எண்ணிக்கை மிகவும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. இந்த வினாவுக்கு விடையளித்தவர்களில் ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான, திருப்திகரமான விடையினை அளித்திருந்தனர். இதற்கான காரணமாக சரியான விடயங்களைக் கற்றிராமையோ அல்லது வினாவைச் சரியான விளங்கிக் கொள்ளாமையோ காணப்பட்டிருக்கலாம். விடையளித்திருந்தவர்களில் முகவராண்மைக் கோட்பாட்டையும் செயன்முகமைக் கோட்பாட்டையும் குழப்பி எழுதியிருந்த சில பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். சில பரீட்சார்த்திகள் முகவராண்மைக் கோட்பாட்டிற்கும் செயன்முகைமைக் கோட்பாட்டிற்கும் இடையிலான வேறுபாட்டை எழுதுவதற்குப் பதிலாக அவ்விரண்டு கோட்பாடுகளையும் தனித்தனியாக எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகத் தாழ்ந்த மட்டத்தில் இருந்தது.**

## <u>பகுதி C</u>

வினா இல. **07** தொடக்கம் **09** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் 10 புள்ளிகள் வீதம் இந்தப் பகுதிக்காக மொத்தமாக 30 புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இப்பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

**வினா இல. 07**

இவ்வினா 2 பகுதிகளில் ஒழுங்கமைத்தல் செயன்முறையை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருந்தது. **பகுதி (a)** ஆனது நிறுவனமொன்றுக்கு விளைதிறன்மிக்க ஒழுங்கமைத்தல் செயன்முறை ஏன் முக்கியமானது என்பதற்கான 3 காரணங்களை விபரிக்குமாறு கோரியிருந்த அதே வேளை **பகுதி (b)** ஆனது தாய அடிப்படையிலான நிறுவனக் கட்டமைப்பொன்றின் 2 அனுகூலங்களையும் 2 பிரதிகூலங்களையும் குறிப்பிடுமாறு கூறியிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (a)** இல் கேட்கப்பட்ட விளைதிறன்மிக்க ஒழுங்கமைப்புச் செயன்முறையின் முக்கியத்துவத்தை திருப்திகரமான முறையில் எழுதியிருந்தனர். மேலும், சில பரீட்சார்த்திகள், விளைதிறன்மிக்க ஒழுங்கமைப்புச் செயன்முறையின் முக்கியத்துவத்தை விபரிக்காது சம்பந்தமற்ற நீண்ட விபரங்களை விடைகளாக எழுதியிருந்தனர். வேறு சில பரீட்சார்த்திகள் அதன் முக்கியத்துவத்தை விபரிப்பதற்குப் பதிலாக ஒழுங்கமைத்தல் பற்றி விபரித்திருந்தனர். இன்னும் சிலரோ முக்கியத்துவத்திற்கான காரணங்களை அடையாங் கண்டிருந்தனர் ஆயினும் அவற்றை விபரித்திருக்கவில்லை. மொத்தத்தில், இப்பகுதிக்கான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டது திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டிருந்தது.

இவ்வினாவின் **பகுதி (b)** இற்கு அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளித்திருக்கவில்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சிலர் விடைகளை எழுதியிருந்த போதிலும் அவர்கள் சரியான அனுகூலங்களையோ, பிரதிகூலங்களையோ எழுதியிருக்கவில்லை. அவர்கள் தாய அடிப்படையிலான ஒழுங்கமைத்தல் கட்டமைப்புக்குப் பதிலாக வேறு வகையான ஒழுங்கமைத்தல் கட்டமைப்புகளுக்குரிய அனுகூலங்களையும் பிரதிகூலங்களையும் எழுதியிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 08

இவ்வினா 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** ஆனது தலைமைத்துவத்தின் 3 பிரதான தொழிற்பாடுகளை விபரிக்குமாறு கோரியிருந்த அதே வேளை, **பகுதி (b)** ஆனது சர்வாதிகாரத் தலைவருக்கும் சனநாயகத் தலைவருக்குமிடையேயான வேறுபாடுகளை விபரிக்குமாறு கோரியிருந்தது. மிகச் சில பரீட்சார்த்திகள் தலைமைத்துவத்தின் வகிபாகத்தை எழுதியிருந்தனர் ஆயினும், அதனை விபரித்திருக்கவில்லை. அத்தகைய பரீட்சார்த்திகளால் முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை. அத்துடன் சில பரீட்சார்த்திகள் ஒரே விடயத்தை இரண்டு வகிபாகங்களாக விபரித்திருந்தனர்.

அதிகளவான பரீட்சார்த்திகள் **பகுதி (b)** இற்கு திருப்திகரமான விடைகளைச் சமர்ப்பித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் அரசியல் பார்வையில் சர்வாதிகாரத் தலைமைத்துவத்தையும் சனநாயகத் தலைமைத்துவத்தையும் பற்றி எழுதியிருந்தனர். இந்த இரு தலைமைத்துவத்திற்குமிடையிலான வேறுபாடுகளை விபரிக்கும்போது, சரியான விபரிப்பு பரீட்சார்த்திகளால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

## வினா இல. 09

இவ்வினா 2 பகுதிகளை உள்ளடக்கியதாக ஊக்கப்படுத்தல் தொடர்பில் அமைக்கப்பட்டிருந்தது. **பகுதி (a)** ஆனது நிறுவனம் ஒன்றுக்கான ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவத்திற்கான 3 காரணங்களை வழங்குமாறு கேட்டிருந்தது. மொத்தத்தில் 95 % ஆன பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க எத்தனித்திருந்ததுடன் அவர்களில் 80 % ஆனவர்கள் நிறுவனம் ஒன்றிற்கான ஊக்கப்படுத்தலின் 3 காரணங்களை விளக்கி முழுப் புள்ளிகளையும் ஈட்டியிருந்தனர். ஊக்கப்படுத்தலின் முக்கியத்து வத்திற்கான காரணங்களை வழங்கியிருந்த சில பரீட்சார்த்திகள் அவ்விடயங்களை விளக்கியிருக்க வில்லை. எனவே, அவர்களால் விபரிப்புக்கான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இம்மூன்று காரணங்களையும் பற்றிய எவ்வித யோசனையையும் கொண்டிருக்காத பரீட்சார்த்திகள் ஒரே விடயம் பற்றிய நீண்ட விபரிப்பினை வழங்கியிருந்தனர். ஒதுக்கீடு செய்யப்பட்ட முழுப் புள்ளிகளையும் ஈட்டுவதற்கு சகல மூன்று காரணங்களையும் குறிப்பிட்டு அவற்றைச் சுருக்கமாக விபரிப்பது அவசியமானதாக இருந்தது.

**பகுதி (b)** ஆனது மக்கிளான்டின் கையகப்படுத்தப்பட்ட தேவைக் கோட்பாட்டின் மூலம் அடையாளங் காணப்பட்ட பின்வரும் 2 தேவைகளையும் விபரிக்குமாறு கோரியிருந்தது.

- **(i)** அடைவுக்கான தேவை
- **(ii)** இணைப்புக்கான தேவை

அடைவுக்கான தேவை தொடர்பில் நடைமுறையில் போதுமானளவு அறிவு பரீட்சார்த்திகளிடம் காணப்பட்டிருக்கவில்லை என்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையினை எழுதி, புள்ளிகளைப் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகளின் அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் அவற்றுடன் தொடர்புபடுத்தி சம்பந்தமற்ற கோட்பாடுகளையும் விடயங்களையும்கூட எழுதியிருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிப்பதைத் தவிர்த்திருந்தனர். மக்கிளான்டின் கோட்பாடு பற்றிய அறிவு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி D

**வினா இல. 10**

இது விடய ஆய்வு வினாவாகும். இங்கு தரப்பட்ட விவரணத்திலுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய கோட்பாட்டு ரீதியான அறிவைப் பயன்படுத்தும் முறையினைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா தயாரிக்கப்பட்டிருந்தது. இவ்வினா **பகுதிகள் (a), (b), (c), (d)** என நான்கு பகுதிகளை உள்ளடக்கியிருந்தது.

**பகுதி (a)**

தரப்பட்ட விவரணத்தில் கூறப்பட்ட கம்பனியின் விளைதிறன்மிக்க திட்டமிடலுக்கான 4 தடைகளை விபரிக்குமாறு இங்கு கேட்கப்பட்டிருந்தது. இந்த நோக்கத்திற்காக, இங்கு தரப்பட்ட கம்பனியின் திட்டமிடலை நன்கு விளங்கிக் கொள்வதும் அதற்கான 4 தடைகளைக் கண்டுபிடிப்பதும் அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக விளக்குவதும் அவசியமானதாக இருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளால் திருப்திகரமான விடைகளை எழுதுவதற்கு இயலுமாக இருந்ததுடன், ஒதுக்கப்பட்ட புள்ளிகளையும் பெறக்கூடியதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் தடைகளைப் பெயரிட்டிருந்தனர் ஆயினும் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்தி அவற்றை விபரித்திருக்கவில்லை. எனவே, விபரிப்புக்காக ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெறுவதற்கு அவர்கள் தவறியிருந்தனர்.

**பகுதி (b)**

இப்பகுதியில் திட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது தடைகளைத் தாண்டக்கூடிய 3 வழிகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதியிருந்ததுடன் ஒதுக்கப்பட்ட புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் நீண்ட விபரங்களை எழுதியிருந்தனர். இங்கு வினாவானது குறிப்பிடுமாறு மாத்திரமே கேட்டிருந்தது.

**பகுதி (c)**

மாற்றத்திற்கான தடைகளைத் தாண்டுவதற்காகப் பின்பற்றக்கூடிய 3 முறைகளைக் ஆராயுமாறு இப்பகுதியில் கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கும்கூட திருப்திகரமான விடைகளை அளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் தடைகளைத் தாண்டுவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகளைக் குறிப்பிட்டிருந்தனர் ஆயினும் அதனை தரப்பட்ட விவரணத்துடன் தொடர்பு படுத்தியிருக்கவில்லை.

**பகுதி (d)**

இப்பகுதி கம்பனியுடன் தொடர்புடைய பெறுமதிச் சங்கிலியின் 4 முதன்மை நடவடிக்கைகளை விபரிக்குமாறு கோரியிருந்தது. மொத்தத்தில் இப்பகுதிக்கான விடை மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே அளிக்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு விடையளிப்பதைத் தவிர்த்தி ருந்தனர். இது, பெறுமதிச் சங்கிலி பற்றிய அறிவு அவர்களிடம் காணப்படவில்லை என்பதையே காட்டுகிறது. சில பரீட்சார்த்திகள் முதன்மை நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்த போதிலும், அவற்றைத் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபடுத்தியிருக்கவில்லை. அத்தகைய பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற இயலவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை மிகவும் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.**

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கருத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

1. பாடத்திட்டத்தை நன்றாகக் கற்கவும்.

2. வினாப்பத்திரத்தைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும். (இந்நோக்கத்திற்காக கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.)

3. பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் கவனமாக வாசித்து, அதில் என்ன வினவப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடை எதிர்பார்க்கப்படும் வேளையில், தேவையற்ற விபரிப்புகளையும் விபரங்களையும் எழுது வதைத் தவிர்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

4. பரீட்சை நேரத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

5. விடைப் புத்தகத்தினை ஒப்படைப்பதற்கு முன், வினா இலக்கங்கள், உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

6. ‘‘செயல் வினைச்சொல் பட்டியல்’’ ஒன்று வினாப்பத்திரத்தின் இறுதியில் தரப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த அட்டவணையில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின் அடிப்படையில் விடைகள் எழுதப்படல் வேண்டும்.

7. கையெழுத்து தெளிவானதாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

8. சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிப்பது விரும்பத்தக்கது.

9. உங்கள் அறிவை மேம்படுத்திக் கொள்வதன் பொருட்டு கடந்தகால வினாப்பத்திரங் களுக்கு விடையளித்துப் பழகிக்கொள்ளுங்கள்.

10. நல்ல முன்னாயத்தத்துடனும் சித்தியடைகின்ற உறுதியானதொரு உறுதிப்பாட்டுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * * -